# இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் 2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்

பின்வரும் சிறந்த கணக்கீட்டு நடைமுறைகளுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ரூபா 5.72 மில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்கள், 03 உழவு இயந்திரங்கள், 03 இழுவைப் பெட்டிகள், 04 மோட்டார் சைக்கிள்கள் என்பன புத்தளம், ஹொல்சீம் தனியார் கம்பனியின் பொறுப்பில் இருந்ததுடன் இவற்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) (i) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான புத்தளம் பாலாவியிலுள்ள 180 ஏக்கர்கள் 05 ரூட்கள் 48 பேச்சர்ஸ்கள் கொண்ட காணி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 8,475,665 பெறுமதியான 6 வகையான சொத்துக்களின் பெறுமானத் தேய்விடப்பட்ட பெறுமதி பூச்சியமாக இருந்தும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் பெறுமதிகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) வரையறுத்த இலங்கை சீமெந்துக் கம்பனியின் பங்குகளில் 62.45% ஆனவை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானதாக இருந்தும் அதற்காக ஒன்றிணைந்த கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 4,413,656 தொகையான மோட்டார் வாகனங்கள் மற்றும் ரூபா 29,911 தொகையான கருவிகளும் நடமாடும் உபகரணங்களுக்காகவும் மீளாய்வாண்டு தொடர்பாக பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பேரேடுகள் மற்றும் பரீட்சை மீதியின் பரிசோதனையின் போது 6 கணக்கு மீதிகளில் காணப்பட்ட கூட்டுத்தொகைகளுக்கிடையே ரூபா 5,260,843 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் கடன்பட்டோர் மற்றும் வைப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 119,073,840 ஆக இருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள காலப்பகுப்பாய்வின் பிரகாரம் தலைமை அலுவலகத்தின் 2 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகள் வரையான மீதி ரூபா 14,947,649 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 6,705,834 ஆகவும் இருந்தன. யாழ்ப்பாண அலுவலகத்தில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 676,706 ஆக இருந்தது.

(ஆ) கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுச் செலவுகளின் மொத்தப் பெறுமதியான ரூபா 61,729,566 தொகையான மீதியில் யாழ்ப்பாணம்

அலுவலகத்திற்குரிய 2 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகள் வரையான மீதி ரூபா 61,500 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 31,929 ஆகவும் தலைமை அலுவலகத்தின் 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கடன்கொடுத்தோர் மீதி ரூபா 4,987,536 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்கொடுத்தோர் மீதி ரூபா 5,790,690 ஆகவும் இருந்தன.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு | ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு பண அறவீகளை அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் உரிய திகதியில் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு | உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பவேண்டிய ரூபா 717,675 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரித் தொகை அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச் சட்டத்தின் 2.1 ஆம் பிரிவு | உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டிய ரூபா 10,042,208 தொகையான |

| | | |
|---|---|---|
| | | பெறுமதிசேர் வரிப் பணம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1990 இன் 6 ஆம் இலக்க மேல் மாகாண நிதி கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு | மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய ரூபா 9,279,249 தொகையான விற்பனை புரள்வு வரிப் பணம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(2) ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் மற்றும் 1978 திசெம்பர் 10 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | ரூபா 543,939,109 தொகையான நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,074,586 தொகையினைச் சுட்டிக்காட்டியிருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 79,373,422 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 84,448,008 தொகையான முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டியிருந்தது. விற்பனைப் புரள்வு குறைவடைந்திருந்தமையும் ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் கடந்த ஆண்டினை விட ரூபா 6,222,311 ஆல் அதிகரித்திருந்தமையும் இந்த முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தன.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 தொழிற்சாலை மற்றும் நிறுவனங்களை ஒப்படைத்தலும் அவற்றின் நிகழ்கால நிலைமையும்

சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற தொழிற்சாலைகளையும் ஒப்படைத்தல் மற்றும் அவற்றின் நிகழ்கால நிலைமை கீழே தரப்படுகின்றது.

| ஒப்படைப்பதற்குரிய அதிகாரம் | தொழிற்சாலை/ நிறுவனம் | ஒப்படைக்கப்பட்ட திகதி | நிகழ்கால நிலைமை |
|---|---|---|---|
| 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்களை பகிரங்க கம்பனிகளாக மாற்றுதல் அதிகாரச்சட்டத்தின் 2(2) (ii) ஆம் பிரிவு | ருகுனு சீமெந்து தொழிற்சாலை | 1992 | தனியார் தரப்பினர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| | புத்தளம் சீமெந்து தொழிற்சாலை | 1993 மே 11 | வரையறுக்கப்பட்ட புத்தளம் கம்பனி எனும் பெயரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. |
| | மட்டக்குளி கடதாசி கடதாசி உறைகள் தொழிற்சாலை | 1993 ஆகஸ்ட் 15 | கொழும்பு சேக் மேக்கர்ஸ் லிமிடட் எனும் பெயரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. |
| வடக்கில் இடம்பெற்ற யுத்த நிலைமை | காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை | 1993 | மூடப்படுதல் |
| | வரையறுத்த புத்தளம் கம்பனி | 1995 | ஹோல்சீம் தனியார் கம்பனியினைத் தோற்றுவித்தல் |
| | 5352 ஏக்கர்கள் கொண்ட சுண்ணாம்புக் கல் குவியல் | 1995 | ஹோல் சீம் கம்பனிக்கு 50 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |

**2.2.2 செயலாற்றல்**

71,120 மெட்ரிக் தொன் சீமெந்தினை விற்பனை செய்வற்காக இலக்கிடப்பட்டிருந்ததுடன் 36,260 மெட்ரிக் தொன் விற்பனை செய்யப்பட்டிருந்தது. இது பாதீடு செய்யப்பட்ட இலக்கில் 51% ஆக இருந்தது.

**2.2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தளம் பாலாவியிலுள்ள கல்லட்வளவில் காணப்படும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 180 ஏக்கர் காணி எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக் கொள்ளப்படாது பாதுகாப்பின்றிக் காணப்படுவதுடன் அதில் மக்கள் அத்துமீறி குடியிருந்துள்ளார்கள்.

(ஆ) துறைமுகத்தலிருந்து சீமெந்து இருப்பினை விடுவிப்பதற்குத் தாமதித்ததன் அடிப்படையில் ரூபா 414,425 தொகை துறைமுகம் மற்றும் கப்பல் கம்பனிக்கு தாமதக் கட்டணமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

**2.2.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் ரூபா 1,083,618,910 தொகையினை வரையறுத்த இலங்கை சீமெந்துக் கம்பனியில் முதலீடு செய்திருந்ததுடன் 1981 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையும் கூட்டுத்தாபனத்திற்கு நலன்களும் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) தனியார் கம்பனி ஒன்றில் 1990 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்யப்பட்ட ரூபா 4,800,000 தொகைக்காக எதுவித நலன்களும் கிடைத்திருக்காததுடன் அப்பங்குகளுக்குரிய பங்கிலாபத்திற்குப் பதிலாக கதிர்காமம் வீட்டுச் செயற்திட்டம் ஒன்று நிர்மாணிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் ரூபா 6,000,000 தொகையான காசோலை ஒன்று 2010 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தும் அச் செயற்திட்டத்திலிருந்து எதுவித நலன்களும் கிடைத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் 725,200 சீமெந்துப் பைகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்ததுடன் 640 சீமெந்துப் பைகளின் பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டிருந்தது. 13,803 பைகள் பழுதடைந்திருந்ததுடன் 955 பைகள் கல்லாகியிருந்தன. இச் செலவுகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

செயற்திறனாக நிதி முகாமைத்துவம் செய்யப்படாததன் காரணமாக மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 7,281,783 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.6 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் நாளது வரையாக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளுக்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவுகளுக்குமிடையே குறிப்பிடதக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 03. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடுகள்

(ஆ) கணக்கீடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) பொருள் பதிவேட்டினைப் பேணுதல்

(உ) சொத்துக்கள் மீள்மதிப்பீடு

(ஊ) நிதி முகாமைத்துவம்